ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA
தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்:dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்:www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | **பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்** |
| திகதி | **17.07.2019** |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2019 மே

### முக்கிய பண்புகள்

- 2019 மேயில் வெளிநாட்டுத் துறை, வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட சுருக்கத்தின் உதவியுடன் ஒப்பீட்டு ரீதியில் உறுதியானதாக விளங்கியது.

- 2019 மேயில், வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2018 மேயின் ஐ.அ.டொலர் 933 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 823 மில்லியனுக்கு குறுக்கமடைந்தது.

- 2019 மேயில் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பிற்கு, இறக்குமதிச் செலவினம் 3.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையும் (ஆண்டுக்கு ஆண்டு) ஏற்றுமதி வருவாய்கள் 4.0 சதவீதத்தினால் (ஆண்டுக்கு ஆண்டு) அதிகரித்தமையும் காரணங்களாக விளங்கின.

- மேயில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 70.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்து (ஆண்டுக்கு ஆண்டு) உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. எனினும், 2019 மே உடன் ஒப்பிடுகையில் யூனில் சுற்றுலாப் பயணிகளினது வருகைகளின் எண்ணிக்கை பெரும்பாலும் இருமடங்காகியதன் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- 2019 மேயில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 562 மில்லியனாக விளங்கி (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 3.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019 முதல் ஐந்து மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,733 மில்லியன்களாக விளங்கின.

**இலங்கை மத்திய வங்கி, 2019 மே மாதத்திலிருந்து, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களுடன் “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டிருக்கிறது. இதனை புள்ளிவிபரங்கள் > பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு என்பனவற்றின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
https://www.cbsl.gov.lk/ta/node/6181

- 2019இன் முதற்காலாண்டுப் பகுதியில் நடைமுறைக் கணக்கு 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர். 587 மில்லியன் கொண்ட பற்றாக்குறைக்கெதிராக ஐ.அ.டொலர் 423 மில்லியன் கொண்ட மிகையினைப் பதிவுசெய்தமைக்கு வர்த்தகப் பற்றாக்குறையின் குறிப்பிடத்தக்க சுருக்கமே முக்கிய தூண்டுதலாக அமைந்தது.

- மேயில் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆறாவது தொகுதி ஆதரவாக அமைந்த வேளையில், அரச பிணையங்களின் வெளிநாட்டு முதலீடுகள் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

- 2019 மே இறுதியில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 6.7 பில்லியனாக அமைந்தன. இது 3.9 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகும். இதனைத்தொடர்ந்து, ஐ.அ.டொலர் 2 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறியின் பெறுகைகளுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2019 யூன் இறுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 8.9 பில்லியனுக்கு அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்[(அ)]**

| வகை | மே 2018 ஐ.அ.டொ. மில் | மே 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-மே 2018 ஐ.அ.டொ. மில் | சன-மே 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 924 | 961 | 4.0 | 4,707 | 4,915 | 4.4 |
| இறக்குமதிகள் | 1,857 | 1,784 | -3.9 | 9,622 | 8,196 | -14.8 |
| வர்த்தக மீதி (தேறிய) | -933 | -823 | | -4,914 | -3,281 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 243 (ஆ) | 71 (இ) | -70.8 | 1,910 (ஆ) | 1,775 (இ) | -7.1 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 580 | 562 | -3.1 | 3,100 (ஈ) | 2,733 | -11.8 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 5 | 4 | | 53 | -20 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 164 | 121 | | 3,690 | 3,324 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 25 | 60 | | 505 | 327 | |
| நீண்ட காலக் கடன்கள் | 139 | 61 | | 685 | 597 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 2,500 | 2,400 | |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | - | 164 | | - | 164 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (ஊ) | | | | 336 | 262 | |
| திரண்ட நிலுவை | | | | 1,170 | -127 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2018 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது.

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2019 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது

(உ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.


(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைப்பு என்பனவற்றின் இணைந்த தாக்கம் காரணமாக வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019 மேயில் குறிப்பிடத்தக்களவிற்கு குறுக்கமடைந்தது. அதேவேளை, 2019இன் முதல் ஐந்து மாதகாலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில், வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,281 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 1,633 மில்லியன்களால் மேலும் சுருக்கமடைந்தது.


- இதேவேளை, ஏற்றுமதிகளின் நியதிகளில் இறக்குமதிகளின் ஒப்பீட்டு ரீதியான விலைகளைப் பிரதிபலிக்கின்ற வர்த்தக மாற்று விகிதம் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க ஏற்றுமதி விலைகள் உயர்ந்த வீதத்தில் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக 2019 மேயில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 4.1 சதவீதத்தினால் 87.2 சுட்டெண் புள்ளிக்கு குறைவடைந்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதல் ஐந்து மாதகாலப்பகுதியில் வர்த்தக மாற்று விகிதம் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2.5 சதவீதத்தினால் குறைவடைந்தது.

**வரைபடம் 1: மாதாந்தவர்த்தகப் பற்றாக்குறை (2018– 2019)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: வர்த்தக மாற்று விகிதம் (2018– 2019)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்


- கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2019 மேயில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 4.0 சதவீதத்தினால் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) ஐ.அ.டொலர் 961 மில்லியனுக்கு அதிகரித்தன.

- 2019 மேயில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு புடவைகள், ஆடைகள் மற்றும் இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மேம்பட்ட செயலாற்றமே முக்கிய காரணமாகும். புடவைகள் மற்றும் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2019 மேயில் அதிகரித்தமைக்கு, பாரம்பரிய சந்தைகளான ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பாரம்பரியமல்லா சந்தைகள் ஆகிய இரண்டிலுமிருந்து ஆடைகளுக்கு ஏற்பட்ட உயர்ந்த கேள்விகளிலிருந்தும் கிடைக்கப்பெற்ற நன்மைகளே காரணங்களாகும். இதன்படி, ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2019 மேயில் 9.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு நெதர்லாந்து, அயர்லாந்து, ஜேர்மனி மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பவற்றிலிருந்தான

உயர்ந்த கேள்வியே தூண்டுதலாக அமைந்தது. மேலும், அனைத்து துணை வகைகளிலும் ஏற்பட்ட உயர்ந்த செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2019 மேயில் இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தன. மேலும், விலங்குத்தீன், அடிப்படை உலோகம் மற்றும் அதன் பொருட்கள், பொறிகள் மற்றும் எந்திர சாதனங்கள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2019 மேயில் கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தன. எனினும், பெற்றோலிய உற்பத்தி ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த ஏற்றுமதி அளவுகள் மற்றும் நீர்க்கல, வானூர்தி எரிபொருளின் சராசரி விலைகள் இரண்டினதும் இணைந்த தாக்கமே காரணமாக அமைந்தது. மேலும், தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை மற்றும் போக்குவரத்துக் கருவிகள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018 மேயுடன் ஒப்பிடுகையில் 2019 மேயில் வீழ்ச்சியடைந்தன.


- 2019 மேயில், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு தேயிலை மற்றும் தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட மேம்பட்ட செயலாற்றமே தூண்டுதலாக அமைந்தது. 2018 ஏப்பிறலுக்குப் பின்னர் முதற்தடவையாக தேயிலையிலிருந்தான ஏற்றுமதிகளின் வருவாய்கள் அதிகரித்தமைக்கு 2018 மேயுடன் ஒப்பிடுகையில் சராசரி ஏற்றுமதி விலைகளில் வீழ்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் உயர்ந்த ஏற்றுமதி அளவுகளே இதற்குக் காரணமாக அமைந்தது. மேலும், தெங்கிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்தமைக்கு தெங்கு உற்பத்திகளின் அனைத்து துணைவகைகளினதும் உயர்ந்த ஏற்றுமதி அளவுகளே முக்கிய காரணமாக அமைந்தது. எனினும், வாசனைத் திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு கறுவா மற்றும் மிளகு என்பனவற்றின் குறைந்த ஏற்றுமதி அளவுகளே முக்கிய காரணங்களாக அமைந்தன. 2019 மேயில் கடலுணவு மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த ஏற்றுமதி அளவுகளினதும் சராசரி விலைகளினதும் இணைந்த தாக்கமே காரணமாக அமைந்தது.
- 2019 மேயில் கனிப்பொருள் ஏற்றுமதியிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு அனைத்து துணைவகைகளிலும் காணப்பட்ட குறைந்த செயலாற்றமே காரணமாகும்.
- 2019 மேயில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 15.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஏற்றுமதி அலகு பெறுமதிச் சுட்டெண் 9.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2018 மேயுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு அதிகரித்த அளவே முழுக்காரணமாக அமைந்தது என்பதனை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | மே 2018 ஐ.அ.டொ. மில். | மே 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன-மே 2018 ஐ.அ.டொ .மில். | சன-மே 2019 ஐ.அ.டொ .மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **709.7** | **741.3** | **4.5** | **3,632.9** | **3,853.2** | **6.1** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 38.5 | 37.2 | (3.5) | 193.6 | 202.3 | 4.5 |
| விலங்குத்தீன் | 7.5 | 11.0 | 47.3 | 45.7 | 51.4 | 12.5 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 398.3 | 424.2 | 6.5 | 2,065.5 | 2,256.0 | 9.2 |
| இதில் ஆடைகள் | 367.8 | 391.6 | 6.4 | 1,931.4 | 2,098.5 | 8.7 |
| புடவைகள் | 21.9 | 23.3 | 6.3 | 94.9 | 114.6 | 20.7 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 8.5 | 9.4 | 10.2 | 39.2 | 42.9 | 9.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 68.6 | 77.2 | 12.5 | 349.1 | 363.1 | 4.0 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 23.1 | 24.8 | 7.5 | 129.7 | 131.1 | 1.0 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 36.2 | 38.1 | 5.4 | 174.9 | 172.2 | (1.6) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.9 | 7.0 | (10.9) | 42.4 | 39.7 | (6.5) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 46.1 | 39.5 | (14.3) | 219.3 | 206.4 | (5.9) |
| இரசாயன உற்பத்திகள் | 14.3 | 15.3 | 7.0 | 66.6 | 72.4 | 8.8 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.6 | 11.0 | 4.1 | 58.0 | 59.9 | 3.4 |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 1.1 | 1.9 | 68.7 | 6.4 | 21.4 | 236.7 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 12.6 | 8.4 | (33.0) | 65.0 | 49.2 | (24.4) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.7 | 5.8 | 0.7 | 31.8 | 30.3 | (4.7) |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 14.5 | 17.5 | 20.7 | 61.9 | 76.9 | 24.2 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.5 | 2.1 | (18.1) | 11.8 | 11.3 | (4.9) |
| ஏனையவை | 22.2 | 20.2 | (9.0) | 111.2 | 109.7 | (1.4) |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **209.6** | **215.9** | **3.0** | **1,052.9** | **1,040.6** | **(1.2)** |
| தேயிலை | 121.2 | 125.6 | 3.6 | 599.3 | 571.8 | (4.6) |
| இறப்பர் | 2.3 | 2.4 | 1.6 | 16.5 | 13.3 | (19.5) |
| தேங்காய் | 24.2 | 32.2 | 33.4 | 125.1 | 143.9 | 15.0 |
| வாசனைத்திரவியங்கள் | 26.0 | 22.6 | (12.8) | 122.0 | 119.1 | (2.4) |
| காய்கறிகள் | 2.1 | 2.8 | 36.2 | 10.8 | 13.6 | 26.5 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.0 | 2.6 | 26.9 | 13.3 | 13.0 | (1.9) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 10.5 | 9.1 | (13.7) | 51.5 | 43.7 | (15.1) |
| கடலுணவு | 21.2 | 18.6 | (12.4) | 114.5 | 122.2 | 6.7 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **3.2** | **2.6** | **(19.9)** | **13.5** | **13.9** | **2.6** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.3** | **1.3** | **(6.0)** | **8.1** | **7.6** | **(6.4)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **923.8** | **961.0** | **4.0** | **4,707.5** | **4,915.3** | **4.4** |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- 2019 மேயில், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,784 மில்லியனுக்கு 3.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, தொடர்ச்சியாக ஏழாவது மாதமாக வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்திருக்கிறது. இவ்வீழ்ச்சிக்கு முதலீட்டு மற்றும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளின் அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளமைக்கு மத்தியிலும் நுகர்வுப் பொருட்களின், குறிப்பாக, தனிப்பட்ட ஊர்திகளின் குறைந்த இறக்குமதிகள் காரணமாக அமைந்தன.


- 2019 மேயில் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தமைக்கு உணவல்லா நுகர்வுப் பொருட்களின் குறைந்த இறக்குமதிகள் முக்கிய காரணமாக அமைந்தன. உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளின் கீழ் தனியாள் உந்து ஊர்திகளின் மீதான இறக்குமதிச் செலவினம், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், 2018 திசெம்பரிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தமைக்கு 2018இன் பின்னரைப்பகுதியில் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீது அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளினதும் 2019 வரவுசெலவுத் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வைகளில் செய்யப்பட்ட அதிகரிப்பினதும் காலம்கடந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கலப்பு மற்றும் மின்னியல் உந்து ஊர்திகள் மற்றும் 1,000 சிசிக்குக் குறைவான எந்திர இயலளவினைக் கொண்ட உந்து ஊர்திகள் என்பனவற்றின் இறக்குமதியில் குறைப்புக்கள் பதிவுசெய்யப்பட்டமையே காரணமாகும். எனினும், உணவு மற்றும் குடிபான இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் பால்மா போன்ற பாற்பண்ணை உற்பத்திகள் என்பனவற்றின் இறக்குமதிகள் 2018 மேயுடன் ஒப்பிடுகையில் 2019 மேயில் அதிகரித்தமையே தூண்டுதலாக அமைந்தது.

- உயர்ந்த எரிபொருள் இறக்குமதிகளின் முக்கிய தூண்டுதலினால் 2019 மேயில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 2018 நவெம்பருக்குப் பின்னர் முதற்தடவையாக சிறிதளவினால் அதிகரித்தன. தாழ்ந்த சராசரி இறக்குமதி விலைகளுக்கு மத்தியிலும் எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் கணிசமாக அதிகரித்தமைக்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரியின் உயர்ந்த இறக்குமதி அளவுகள் காரணங்களாக அமைந்தன. மாறாக மசகெண்ணெய் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த சராசரி விலைகளும் அதேபோன்று இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சியும் காரணங்களாக அமைந்தன. மேலும், துணிகள் மற்றும் நூல் வகைகளை முக்கியமாகக் கொண்ட புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மீதான செலவினமும் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் அதிகரித்தது. எனினும், கோதுமை மற்றும் சோளம் என்பன மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு 2019 மேயில் கோதுமையின் இறக்குமதி அளவு குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். மேலும், 2019 மேயில் அடிப்படை உலோகங்கள், பிளாத்திக்கு மற்றும் அது தொடர்பான பொருட்கள், இரசாயன உற்பத்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினமும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.

- 2019 மேயில் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி மீது உறப்பட்ட செலவினம் அதிகரித்தமைக்கு கட்டட மூலப்பொருட்கள் மற்றும் பொறிகள் மற்றும் கருவிகள் என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாக அமைந்தன. கட்டட மூலப்பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கு அதேபோன்று பொறி மற்றும் கருவிகள் அதேபோன்று மின்கடத்திச் சோதனைச் சாதனங்கள் மற்றும் அலுவலக பொறிகள் என்பனவற்றை முக்கியமாகக் கொண்ட பொறிகள் மற்றும் கருவிகள் என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகளே தூண்டுதலாக அமைந்தன. எனினும், எண்ணெய்த் தாங்கள் மற்றும் நீர்த்தாங்கிகளின் குறைந்தளவு இறக்குமதிகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் போக்குவரத்துக் கருவிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட, வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற ஊர்திகளின் இறக்குமதிகள் 2018 மேயுடன் ஒப்பிடுகையில் 2019 மேயில் வீழ்ச்சியடைந்தன.


- 2019 மேயில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2.2 சதவீதத்தினால் அதிகரிக்க, அலகுப்பெறுமதிச் சுட்டெண் 6.0 சதவீததத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது, இம்மாதகாலப்பகுதியில் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட குறைப்பு முழுமையாக தூண்டுதலாக விளங்கியதை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6:இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம்(அ)

| வகை | மே 2018 ஐ.அ.டொ. மில். | மே 2019 ஐ.அ.டொ .மில். | மாற்றம் (%) | சன-மே 2018 ஐ.அ.டொ. மில். | சன-மே 2019 ஐ.அ.டொ .மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **414.8** | **332.5** | **(19.8)** | **2,194.8** | **1,552.9** | **(29.2)** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 128.6 | 134.8 | 4.9 | 781.2 | 592.3 | (24.2) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.3 | 2.4 | 2.8 | 107.8 | 14.2 | (86.8) |
| இதில் அரிசி | 0.8 | 0.5 | (45.6) | 99.6 | 5.4 | (94.6) |
| பால் உற்பத்திகள் | 22.6 | 30.3 | 34.2 | 137.9 | 134.2 | (2.7) |
| பழங்கள் | 8.8 | 6.4 | (26.9) | 41.1 | 35.1 | (14.6) |
| எண்ணெய் மற்றும் கொழுப்பு | 5.1 | 2.1 | (58.3) | 22.8 | 13.3 | (41.7) |
| வாசனைத்திரவியங்கள் | 10.5 | 7.6 | (27.3) | 43.7 | 44.1 | 0.9 |
| கடலுணவு | 17.2 | 25.9 | 50.4 | 94.0 | 92.2 | (1.9) |
| சீனி மற்றும் இனிப்புப் பொருட்கள் | 25.2 | 21.0 | (16.7) | 130.3 | 85.1 | (34.7) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 36.9 | 39.1 | 5.9 | 203.6 | 174.1 | (14.5) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 286.2 | 197.7 | (30.9) | 1,413.6 | 960.7 | (32.0) |
| தனியாள் ஊர்திகள் | 149.3 | 58.7 | (60.7) | 665.9 | 276.0 | (58.5) |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 41.8 | 49.2 | 17.8 | 210.5 | 210.8 | 0.1 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 19.6 | 16.7 | (14.8) | 116.6 | 100.9 | (13.5) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 14.4 | 13.6 | (5.0) | 101.7 | 85.3 | (16.1) |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 24.3 | 20.9 | (14.2) | 140.5 | 115.8 | (17.5) |
| அச்சிடல் பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் | 3.7 | 5.0 | 36.0 | 13.5 | 13.7 | 2.0 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 33.2 | 33.7 | 1.5 | 165.0 | 158.1 | (4.2) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,042.7** | **1,047.0** | **0.4** | **5,372.5** | **4,703.8** | **(12.4)** |
| எரிபொருள் | 348.9 | 402.8 | 15.5 | 1,750.9 | 1,716.4 | (2.0) |
| இதில் மசகெண்ணெய் | 115.7 | 105.6 | (8.7) | 319.5 | 398.8 | 24.8 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 233.1 | 294.1 | 26.2 | 1,287.1 | 1,192.5 | (7.3) |
| நிலக்கரி | 0.1 | 3.1 | 2,832.8 | 144.3 | 125.2 | (13.3) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 12.7 | 16.6 | 31.0 | 486.7 | 81.2 | (83.3) |
| இதில் தங்கம் | 0.1 | 0.6 | 546.2 | 437.4 | 1.5 | (99.7) |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 246.8 | 260.6 | 5.6 | 1,129.5 | 1,168.2 | 3.4 |
| இரசாயன உற்பத்திகள் | 82.6 | 76.3 | (7.7) | 374.0 | 350.1 | (6.4) |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 62.2 | 53.7 | (13.6) | 300.2 | 244.4 | (18.6) |
| ஊர்திகள் மற்றும் எந்திர உதிரிப்பாகங்கள் | 25.8 | 23.5 | (8.9) | 129.2 | 115.2 | (10.8) |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 45.7 | 43.1 | (5.6) | 205.2 | 179.7 | (12.5) |
| அடிப்படை உலோகங்கள் | 56.8 | 44.0 | (22.6) | 245.8 | 216.7 | (11.8) |
| கோதுமை மற்றும் சோளம் | 44.7 | 23.9 | (46.5) | 174.9 | 110.7 | (36.7) |
| வளமாக்கி | 12.1 | 10.6 | (12.0) | 100.6 | 85.2 | (15.3) |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 20.8 | 23.6 | 13.3 | 103.7 | 92.5 | (10.8) |
| உணவுத் தயாரிப்புக்கள் | 20.8 | 23.6 | 13.3 | 103.7 | 92.5 | (10.8) |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 62.7 | 44.6 | (28.9) | 268.3 | 251.0 | (6.5) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **398.2** | **403.7** | **1.4** | **1,988.9** | **1,936.6** | **(2.6)** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொறி மற்றும் கருவிகள் | 201.4 | 206.8 | 2.7 | 1,068.3 | 1,055.6 | (1.2) |
| கட்டடப் பொருட்கள் | 142.3 | 149.8 | 5.3 | 642.0 | 626.8 | (2.4) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 54.2 | 46.4 | (14.4) | 275.6 | 251.3 | (8.8) |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.3 | 0.7 | 130.5 | 3.0 | 2.9 | (3.7) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **1.2** | **0.4** | **(66.8)** | **65.3** | **2.8** | **(95.7)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,857.0** | **1,783.7** | **(3.9)** | **9,621.6** | **8,196.2** | **(14.8)** |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை


## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- 2019 மேயில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள், 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு இம்மாதகாலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளினது வருகைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். 2019 மேயில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 37,802ஆக விளங்கி 70.8 சதவீதம் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட அத்தகைய வீழ்ச்சிக்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினை உடனடுத்து இந்தியா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, ஜேர்மனி, சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற முக்கிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். எனினும், ஏறத்தாழ 40 நாடுகளினால் விடுக்கப்பட்ட பயண ஆலோசனைகள் 2019 மே மற்றும் யூன் காலப்பகுதியில் தளர்த்தப்பட்டமையின் காரணமாக ஆண்டின் எஞ்சிய பகுதியில் இத்தொழில் நேர்க்கணியத் தாக்கத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வபிவிருத்திகள் 2019 மேயுடன் ஒப்பிடுகையில் யூனில் வருகைகள் பெரும்பாலும் இரண்டு மடங்காகவதற்கு உதவியது.

- 2019 மேயில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 71 மில்லியன் என மதிப்பிடப்பட்டதுடன் 2019இன் முதல் ஐந்து மாதகாலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,775 மில்லியன்களாக விளங்கின.


- 2019 மேயில், தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 562 மில்லியன்களாக விளங்கி ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 3.1 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019இன் முதல் ஐந்து மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,733 மில்லியன்களாக விளங்கின.

**வரைபடம் 7: சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள் (மே)**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 8: சுற்றுலாவிலிருந்தானவருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி


## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2019 மேயில் அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 64 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், அரச பிணையங்கள் சந்தைக்கான தேறிய வெளிப்பாய்ச்சல்கள் ஆண்டின் முதல் ஐந்து மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 90 மில்லியனாக விளங்கின.
- முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் 2019 மே மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3.7 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2019 முதல் ஐந்து மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 20 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன.
- 2019 மேயில் அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் ஐ.அ.டொலர் 345 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்யதமைக்கு ஐ.அ.டொலர் 333 மில்லியன் கொண்ட கூட்டுக்கடன்களின் மீள்கொடுப்பனவுகளே முக்கிய காரணமாகும்.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2019 மே இறுதியிலுள்ளவாறு, இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 6.7 பில்லியன் என மதிப்பிடப்பட்டதுடன் இது 3.9 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன. இதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2019 மே இறுதியில் ஐ.அ.டொலர் 9.5 பில்லியனாக விளங்கி 5.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன.

**வரைபடம் 9: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**





**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- 2019 யூலை 17ஆம் திகதி வரையான இவ்வாண்டுப்பகுதியில், ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 4.1 சதவீதத்தினால் உயர்வடைந்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் கனடியன் டொலர் தவிர்ந்த ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் ரூபா உயர்வடைந்தது.

**வரைபடம் 10: ஐ.அ.டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 யூலை 17 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +4.1% |
| யூரோ | -12.7% | +6.2% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | +6.4% |
| யப்பானிய யென் | -18.1% | +1.9% |
| கனேடியன் டொலர் | -9.3% | -0.1% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +4.6% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.1% |